செ.வெ.எண் - 28 நாள்-13.12.2020

## அரியலூர் மாவட்டம்

## வாக்காளர் சிறப்பு திருத்த முகாமினை மாவட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்குட்பட்ட உடையார்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (13.12.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

இந்திய தேர்தல் ஆணைத்தின் அறிவுறுரையின்படி, 01.01.2021 அன்று 18 வயது பூர்த்திடையும் அனைத்து தகுதியுள்ள நபர்களும் தங்களது பெயரினை வாக்காளர் பட்டியலில் சேர்த்திடவும், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் திருத்தம், முகவரி திருத்தம் மற்றும் பெயர் நீக்கம் போன்றவற்றிற்கான விண்ணப்பங்களை அந்தந்த பகுதியில் நடைபெறும் சிறப்பு திருத்த முகாம் நடைபெறும் நாட்களில் அளித்து பயன்பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் பகுதியில் நடைபெற்ற சிறப்பு திருத்த முகாமில் பொதுமக்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரை சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய முழு விபரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தகுந்த ஆதாரங்களுடன் வழங்க வேண்டும். எனவே, 18 வயது பூர்த்திடையும் அனைத்து தகுதியுள்ள நபர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் பாகம் மாற்றம் மற்றும் முகவரி மாற்றம் போன்றவற்றுக்கான படிவங்களை தங்களது பகுதியிலுள்ள வாக்குச்சாவடி மைய அலுவலர்களிடம் உரிய படிவங்களை பூர்த்தி செய்து வண்ணப்புகைப்படம் மற்றும் உரிய ஆதாரங்களுடன் அளித்து பயன்பெறுமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின்போது, கோட்டாட்சியர் பூங்கோதை (உடையார்பாளையம்), வட்டாட்சியர் கலைவாணன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**